# கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார் அவர் ஆசீர்வதிப்பார். சங் 115 : 12

**நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரை துதியுங்கள்**

**அவர் கிருபை என்றுமுள்ளது.**

அன்பு சகோதரனே, சகோதரியே,

கர்த்தர் உன்னை நினைத்திருக்கிறார். கட்டாயம் உன்னை ஆசீர்வதிப்பார். "**என்னை யாரும் நினைப்பதில்லை**"- என்று சொல்லுகிற வார்த்தையை விட்டு விடுங்கள். அதற்குப் பதிலாக கீழ்கண்டபடி சொல்லுங்கள்.

**கர்த்தர் என்னை நினைத்திருக்கிறார் அவர் ஆசீர்வதிப்பார்.**

உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் என்று வேதம் சொல்கிறது.

**ஏசாயா 44:21 சொல்கிறது. :** நீ என் தாசன். நான் உன்னை உருவாக்கினேன். நீ என் தாசன். இஸ்ரவேலே, நீ என்னால் மறக்கப் படுவதில்லை–என்பதாக.

அன்பு நண்பரே,

நீர் கர்த்தருடைய தாசன். நீங்கள் கர்த்தரால் மறக்கப்படுவதில்லை.

**ஏசாயா 49:15 சொல்கிறது :** ஸ்திரியானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பலகனை மறப்பாளோ ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை.

அன்பரே, உங்கள் தாய் உங்களை மறந்தாலும், உங்களை நேசிக்க உரிமை பெற்றவர்கள் உங்களை மறந்தாலும் கர்த்தர் உங்களை மறப்பதில்லை

**ஆதியாகமம் 40:14 இல் :** யோசேப்பு பானபாத்திரகாரனைப் பார்த்து சொல்லுகிறார், நீ வாழ்வடைந்திருக்கும்போது என்னை நினைத்து என்னை விடுதலையாக்க வேண்டும் என்பதாக.

**ஆதியாகமம் 40:23 சொல்கிறது. :** ஆனாலும் பாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்து போனான் என்பதாக.

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

மனிதன் மறந்து போவான். ஆனால் தேவன் மறக்கமாட்டார்

**கர்த்தர் நம்மை நினைத்தருக்கிறார். அவர் ஆசீர்வதிப்பார்**

**1 சாமுவேல் 1 :11ல் : அன்னாளின் ஜெபத்தை கீழ்கண்டவாறு வாசிக்கிறோம்.**

சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைத்தருளி, உமது அடியாளுக்கு ஒரு பிள்ளையை கொடும்

**1 சாமுவேல் 1:19 சொல்கிறது :**

எல்கானா தன் மனைவியாகிய அன்னாளை அறிந்தான். கர்த்தர்அவளை நினைந்தருளினார்.

**ஆதி 30:22 சொல்கிறது.**

தேவன் ராகேலை நினைந்தருளினார். அவளுக்குத் தேவன் செவிகொடுத்து, அவள் கர்ப்பந்தரிக்கும் படி செய்தார்.

**நியாதிபதிகள் 16 :28 சொல்கிறது.**

சிம்சோன் கர்த்தரை நோக்கி, இந்த ஒரு விசை மாத்திரம் என்னை நினைத்தருளும்.

**லுக்கா 23:42 செல்கிறது.**

கள்ளன், இயேசுவை நோக்கி, ஆண்டவரே, நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்.

மேற்கண்ட வசனங்களையெல்லாம் கவனித்து பார்க்கும் பொழுது, அன்னாள் நினைத்தருளும் என்று ஜெபிக்கிறாள். ராகேல் நினைத்தருளும் என்று ஜெபிக்கிறாள். சிம்சோன் நினைத்தருளும் என்று ஜெபிக்கிறார். கள்ளன் நினைத்தருளும் என்று ஜெபிக்கிறார். கர்த்தர் அப்படியே நினைக்கிறார்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே, இந்த மாதத்தில் உங்கள் பிரச்சனை, பாரங்கள், கவலைகள் எதுவாக இருந்தாலும், அவைகளை நினைத்தருளும் என கண்ணீரோடு கேளுங்கள். கெஞ்சுங்கள்.

கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார். அவர் ஆசீர்வதிப்பார். உண்மையில் நாம் தகுதியுள்ளவர்கள் அல்ல.

**பக்தன் பாடுகிறார்.**

மனுஷனை நீர் நினைக்கவும், அவனை விசாரிக்கவும்,
மண்ணிலவன் எம்மாத்திரம் மன்னவா உம் தயவே என்பதாக.

ஆம் கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார் என்றால் அவருடைய சுத்த கிருபையே.

**சங்கீதக்காரன் சொல்கிறார்.**

நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்.
அவர் கிருபை என்றுமுள்ளது என்பதாக.

**கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார். அவர் ஆசீர்வதிப்பார்.**